## இயல் 6.3 - விகிதம் மற்றும் விகித சமம்

பயிற்சி எண் :: 6.3.3.3.A

விகிதம் - கோடிட்ட இடங்களை நிரப்புக - த.நா.அ.பு - பயிற்சி 3.3.1-3

## விகிதம் - கோடிட்ட இடங்களை நிரப்புக - த.நா.அ.பு - பயிற்சி 3.3.1-3

1. விடுபட்ட எண்களை நிரப்புக.

(i) 3 : 5 :: **12** : 20

(ii) **9** : 24 :: 3 : 8

(iii) 5 : **4** :: 10 : 8 :: 15 : **12**

(iv) 12 : **24** :: **2** : 4 :: 8 : 16

2. சரியா, தவறா எனக் கூறுக.

(i) 7 நபர்களுக்கும் 49 நபர்களுக்கும் உள்ள விகிதமும், 11 கிகி எடைக்கும் 88 கிகி எடைக்கும் உள்ள விகிதமும் விகித சமத்தை அமைக்கும். ✗

7 : 49 :: 11 : 88

$\frac{7}{7}$ : $\frac{49}{7}$ :: $\frac{11}{11}$ : $\frac{88}{11}$

∴ 1 : 7 ≠ 1 : 8

∴ விகிதங்கள் சமம் இல்லை ஆகவே விகித சமத்தை அமைக்காது.

(ii) 10 நூல்களுக்கும் 15 நூல்களுக்கும் உள்ள விகிதமும், 3 நூல்களுக்கும் 15 நூல்களுக்கும் உள்ள விகிதமும் விகித சமத்தை அமைக்கும். ✗

10 : 15 :: 3 : 15

$\frac{10}{5}$ : $\frac{15}{5}$ :: $\frac{3}{3}$ : $\frac{15}{3}$

∴ 2 : 3 ≠ 1 : 5

∴ விகிதங்கள் சமம் இல்லை ஆகவே விகித சமத்தை அமைக்காது.

(iii) 40 நூல்களின் எடை 8 கிகி எனில், 15 நூல்களின் எடை 3 கிகி. ✓

40 : 8 :: 15 : 3

$\frac{40}{8}$ : $\frac{8}{8}$ :: $\frac{15}{3}$ : $\frac{3}{3}$

∴ 5 : 1 = 5 : 1

∴ விகிதங்கள் சமம் ஆகவே விகித சமத்தை அமைக்கும்

(iv) சீரான வேகத்தில், ஒரு மகிழுந்து 3 மணி நேரத்தில் 90 கி.மீ எனப் பயணிக்கிறது. அதே வேகத்தில், 5 மணி நேரத்தில் அது 140 கிமீ தொலைவைப் பயணிக்கும். ✗

3 : 90 :: 5 : 140

$\frac{3}{3}$ : $\frac{90}{3}$ :: $\frac{5}{5}$ : $\frac{140}{5}$

∴ 1 : 30 ≠ 1 : 28

∴ விகிதங்கள் சமம் இல்லை. ஆகவே இவ்விரு விகிதங்களும் விகித சமத்தை அமைக்காது.

கொடுத்ததற்கு மாறாக, மகிழுந்து 150 கி.மீ தொலைவு பயணித்திருந்தால் 1 : 30 என விகித சமத்தை அமைத்திருக்கும்.

3. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(i) 3 எழுதுகோல்களின் விலை ₹18 எனில், 5 எழுதுகோல்களின் விலை **₹30**

3 எழுதுகோல்களின் விலை = ₹18

1 எழுதுகோல்களின் விலை = $\frac{18}{3}$ = ₹6

∴ 5 எழுதுகோல்களின் விலை = 5 × 6 = ₹30

(ii) 15 நாள்களில் கார்குழலி ₹1800 ஐ வருமானமாகப் பெறுகிறார் எனில், ₹3000 ஐ **25** நாள்களில் வருமானமாகப் பெறுவார்.

15 நாள்களில் கார்குழலியின் வருமானம் = ₹3000

கார்குழலியின் 1 நாள் வருமானம் = $\frac{1800}{15}$ = ₹120

∴ கார்குழலி எத்தனை நாட்களில் ₹3000 வருமானம் பெறுவார்? = $\frac{3000}{120}$ = 25 நாட்கள்


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 8th March, 2022 :: 04:49 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted**. However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**